## <u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.VII, கோயமுத்தூர்.</u>

**முன்னிலை:** திரு.K. இந்திரஜித்.,பி.ஏ.,எம்.எல்.,

நீதித்துறை நடுவர் எண். VII, கோயமுத்தூர்.

<u>குற்றப் பல்வகை மனு எண்: 3060/2025</u>

**<u>in</u>**

<u>குற்ற எண்.68/2024</u>

<u>2025 ம் வருடம் ஏப்ரல் மாதம் 07 ம் நாள் திங்கள்கிழமை</u>

1) சந்தியா சதீஷ் பட்டாவியா(70)
   க/பெ. சதீஷ் வீர்சந்த் பட்டாவியா
2) சதீஷ் வீர்சந்த் பட்டாவியா(72)
   த/பெ. வீர்சந்த் ரகுநாத் படடாவியா ... மனுதாரர் / 1,2 ம் எதிரிகள்

/எதிர்/

<u>அரசுக்காக.</u>
காவல் ஆய்வாளர்,
கோவை மாநகர குற்றப்பிரிவு காவல் நிலையம்,
கோயம்புத்தூர்.
குற்ற எண்.68/2024
ச/பி. 406, 420, 120B இதச ... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

<u>உத்தரவு</u>

1. இவ்வழக்கின் எதிரிகள் / மனுதாரர்கள் தரப்பில் வெளிநாடு செல்ல அனுமதி வேண்டி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள் 406, 420, 120B இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட எதிரிகள் 2024 ம் ஆண்டு சென்னை மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் Crl.Op.No. 28993/2024 ல் முன்ஜாமீன் கோரி விண்ணப்பம் செய்து 07.03.2025 ம் தேதியன்று வழங்கப்பட்டது என்றும் மேலும் 12.03.2025 ம் தேதியன்று பதிவேற்றம் செய்யப்பட்டது என்றும், மேற்படி முன்ஜாமீன் கோரப்பட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பல நிபந்தனைகளை விதித்துள்ளது. 07.03.2025 ம் தேதியிட்ட ஆணையில் Para 9(iv)(c) கீழ்க்கண்டவாறு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

"மேற்படி எதிரிகள் வெளிநாடு செல்வதற்கு முன்பு விசாரணை நீதிமன்றத்தின் முன்அனுமதியைப் பெற வேண்டும் என்றும் மற்றும் அவர்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பி

வந்ததும் தங்கள் பாஸ்போர்ட்டை கனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் சென்னை மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.”

3. மேற்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வெளிநாடு செல்வதற்கு அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையின் படி, மனுதாரர்கள் தரப்பில் எதிரிகள் வெளிநாட்டிற்கு 21.04.2025 ம் தேதியன்று அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் இருந்து புளோரிடாவிற்கு தங்களது உடல்நிலை பரிசோதனை காரணமாக 10 வாரங்களுக்கு தங்கி மருத்துவப்பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுக்காக செல்ல வேண்டியிருப்பதாலும், மேற்படி 26.06.2025 ம் தேதியன்று அமெரிக்காவிலிருந்து கிளம்பி இந்தியாவிற்கு திரும்ப வந்துவிடுவோம் என்றும் அதற்காக 1 ம் எதிரி பாஸ்போர்ட் அயல் நாட்டு கடவுச்சீட்டு எண். 567317818 மற்றும் 2 ம் எதிரி பாஸ்போர்ட் அயல் நாட்டு கடவுச்சீட்டு எண். 567453060 ஆகியவற்றை மனுவுடன் இணைத்து மனுதாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் இந்தியாவிலிருந்து திரும்ப வந்தவுடன் இந்த நீதிமன்றத்தில் தேவைப்படும்போது மேற்கூறிய கடவுச்சீட்டை சமர்பிப்பதாகவும் மனுதாரர்கள் வேண்டியுள்ளார்கள். மனுதாரர் அமெரிக்காவில் மருத்துவரிடம் பரிசோதனை மேற்கொள்ள முன் அனுமதி பெற்று அதனை இம்மனுவில் ஆவணமாக சமர்ப்பித்துள்ளார்கள். மேலும் மேற்சொன்ன சங்கதிகள் அனைத்திற்கும் பிரமாண வாக்குமூலமும் கொடுத்துள்ளார்கள்.

4. எதிர்மனுதாரர் மற்றும் அரசு தரப்பில் வாதி எதிரிகளுடன் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி இந்த வழக்கு தொடர்பாக கோவை சமரச தீர்வு மையத்தில் 27.11.2024 ம் தேதியன்று வாதி மற்றும் எதிரிகள் ஆகிய இரு தரப்பினரும் ஆஜராகி தங்கள் பிரச்சனைக்கு தீர்வு காண அறிவுறுத்தி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி இவ்வழக்கின் எதிரிகள் இரண்டு முறை சமரச தீர்வு மையத்தின் விசாரணைக்கு ஆஜராகியும் இவ்வழக்கில் எந்த சமரசமும் ஏற்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. மேற்படி சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் படி எதிரிகளுக்கு முன்பிணை வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் எதிரிகள் வெளிநாட்டிற்கு சென்று வர அனுமதி கோரி மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

5. மேற்படி எதிரிகள் அமெரிக்கா குடியுரிமை பெற்றவர்கள் என்பதாலும் இவர்களுக்கு தமிழ்நாட்டிலோ இந்தியாவிலோ நிரந்தர இருப்பிடம் இல்லை என்பதாலும் இவர்கள் தற்போது தங்கும் விடுதிகளில் தங்கியுள்ளார்கள் என்பதாலும், இது வரை இவ்வழக்கின் வாதிக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்காமல் உள்ள படியாலும் எதிரிகளுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கினால் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் எதிரிகள்

வெளிநாட்டிலேயே இருந்து கொள்ள வாய்ப்புள்ளதாலும், அதனால் வழக்கு விசாரணை பாதிக்கப்படும் என்பதாலும் எதிரிகளுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு பதிலுரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்களின் பரிசீலனையின்படி மனுதாரர்கள் தரப்பில் எதிரிகள் வெளிநாட்டிற்கு 21.04.2025 ம் தேதியன்று ஹாங்ஹாங், சைனா சென்றும் அங்கிருந்து அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸில் சென்றும் அங்கிருந்து புளோரிடாவிற்கு தங்களது உடல் நிலை பரிசோதனை காரணமாக 10 வாரங்களுக்கு தங்கி மருத்துவப்பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுக்காக செல்ல வேண்டியிருப்பதாக கூறியுள்ளதை குறிப்பிட்டும், மேற்படி 26.06.2025 ம் தேதியன்று அமெரிக்காவிலிருந்து கிளம்பி இந்தியாவிற்கு திரும்ப வந்துவிடுவோம் என்பதற்கு ஆதரவாக பிரமாணப்பத்திரம், ஆவணங்களான பாஸ்போர்ட் மற்றும் அவர்களின் வயதினைக் கருத்திற்கொண்டும் எதிரிகளின் வேண்டுகோளை ஏற்றும் வெளிநாடு செல்வதற்கு இந்நீதிமன்றம் அனுமதியளித்து உத்தரவிடுகிறது. எனவே மனுதாரர்கள் / எதிரிகள் 21.04.2025 ம் தேதி முதல் 26.06.2025 ம் தேதி வரை வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியும் பின்னர் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த பிறகு மனுதாரர்கள் தங்களது கடவுச்சீட்டுக்களை இந்த நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற உத்தரவுடன் அனுமதிக்கப்படுகிறது.

1. மனுதாரர்கள் / எதிரிகள் தங்களுக்காக இரு நபர்கள் பிணையிலும் ரூ.10,000/-த்திற்கு பிணைப்பத்திரம் எழுதித் தர வேண்டும்.

*இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2025 ம் வருடம் ஏப்ரல் மாதம் 07 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.*

(ஒப்பம்/-K.இந்திரஜித்),
நீதித்துறை நடுவர் எண்.VII,
கோயம்புத்தூர்.